பத்திரிக்கை செய்தி

சலவை செய்யும் நிறுவனத்திற்கு புதிய மின் இணைப்பு வழங்க லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய இளநிலை பொறியாளருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

புகார்தாரர் திரு.சிவபாரதி, சிவந்திபட்டி ரோடு, மகாராஜா நகர், திருநெல்வேலியில் வசித்து வருகிறார் புகார்தாரர் வல்லநாடு பகுதியில் புதிதாக சலவை செய்யும் நிறுவனம் நடத்த புதிய மின் இணைப்பு வேண்டி இளநிலை பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழகம், வல்லநாடு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.திருப்பதி, இளநிலை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழகம், வல்லநாடு தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.35,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை 07.05.2010ம் தேதி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.திருப்பதி, இளநிலை பொறியாளர், அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.35,000/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது தூத்துக்குடி முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 12.05.2025 திரு.திருப்பதி, முன்னாள் இளநிலை பொறியாளருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணை மற்றும் ரூ.20,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.